மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒன்றும் போதிய அளவுக்கு இருக்கும் தொழிற்சாலையல்ல. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைக்குக் கூட ஒரு யோசனை சொல்லப்பட்டது. குறைந்த அளவு உற்பத்தியை வைத்துக் கொண்டிருந்தால் இந்திய அளவிலே வயபிள் ஆக இருக்க முடியாது, அந்தத் தொழிற்சாலை இன்னும் நல்ல முறையிலே அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் தொழிற்சாலை கான்சன்ட்ரேஷன் ஆப் பீபிள் உள்ள பகுதிகளிலே ஆரம்பிக்காமல் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கிற உசிலம்பட்டி, முதுகுளத்தூர் பகுதிகளிலே ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியைப்பற்றி இங்கே கேள்வி கேட்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லா மாவட்டங்களிலும் ஒரு சில பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. பின்தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிப்பதிலேதான் நாம் அதிகமாக உற்சாகம் காட்டி வருகிறோம்.

சூலூரிலுள்ள ராமச்சந்திரன் குளம்

* 417 **வினா—திரு. கே. என் குமாரசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்கா, சூலூரில் உள்ள ராமச்சந்திரன் குளம் ஒன்றை நூறு எக்கராவில் அமைக்கத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.